**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

**CC.No. 113/2011**

**தேதி : 25.11.2024**

**PW8 இரத்தினாம்பாள் க/பெ. ஆர்தர் தேவராஜ்**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு04.06.2010ம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று இடத்தை பார்வையிட்டு பின்பு லப்பைக்குடிக்காட்டிற்கு சென்று சாட்சிகள் அப்துல் ஜமீல் சாகிப்பு, நூருல் ஹிதாபேகம், சௌகத் அலி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அசல் ஆவணங்களை கேட்டு சார்பதிவாளர் அலுவலகம் வாலிகண்டபுரம், கிராம நிர்வாக அலுவலர் எறையூர், வட்டாட்சியர் அலுவலகம் வேப்பந்தட்டை ஆகியோர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 29.06.2010ம் தேதி சாடம்சிகள் அகமது உசைன், ஜாபர் உசைன், பர்வேஸ் அகமது, அப்துல் நாசர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.07.2010ம் தேதி ஜி. குமார் வட்டாட்சியர் வேப்பந்தட்டை என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

20.07.2010ம் தேதி குன்னம் வட்டாட்சியருக்கு சம்பந்தப்பட்ட இடத்திற்கு உரிமையாளர், வாரிசுதாரர்கள் விவரம் கேட்டு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். 25.08.2010ம் தேதி சாட்சி அப்துல் சமத் அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.09.2010ம் தேதிஎறையூர் கிராம

நிர்வாக அலுவலர் சுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.10.2010ம் தேதி வாதியிடமிருந்து நில உரிமை பதிவேடு பட்டா பாஸ் புத்தகம். 24.06.1986 தேதியிட்ட கிரைய பத்திரம் 1406 / 85, 30.03.2004 தேதியிட்ட சிட்டா 08.04.2010 தேதியிட்ட சிட்டா ஆகியவற்றை விசாரணைக்காக பெற்றேன். 08.12.2010 சாட்சி முகமது அலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

23.12.2010ம் தேதி காலை 9.00 மணிக்கு எதிரி நசீர் அகமது என்பவரை லப்பைக்குடிக்காடு பேருந்து நிறுத்தத்தில் காரணம் கூறி கைது செய்தேன். கைது செய்த விவரத்தை அவருடைய மனைவிக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தேன். எதிரியை 10.00 காவல் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 3வது எதிரி அல்சாக் ஷேக் முகமது மற்றும் ஹசினா பிபீ ஆகியோர் பெரம்பலூர் மாவட்ட முதன்மை நீதிமன்ற முன்பிணையில் சென்றுள்ளார்கள். 20.06.2012ம் தேதி 1வது எதிரி ஹசினா பிபீ –ன் இறப்பு சான்றிதழ் பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் ராஜாசுந்தர் என்னை விசாரித்தார்.

<u>4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற உத்தரவின்படி நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பு எங்களிடம் புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து வந்த புகாரில் 4வது எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். ஆனால் புகாரில் வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அப்போது பணியில் இருந்த அரசு ஊழியர்களும் உடந்தையாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 புகாரிலும், வாக்குமூலத்திலும் எந்த தேதியில்

மோசடியான பட்டா மாற்றம் செய்தார்கள் என்றும், எப்போது அதை தெரிந்துகொண்டார் என்றும் தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 08.04.2009 முதல் 28.04.2009 வரை நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ3 சிட்டாவை நான் அ.சா.1 யிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1ன் வாக்குமூலத்தில் சிட்டாவை ஒப்படைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த சாட்சிகள் யாரும் 4வது எதிரியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த அதிகாரி குற்றம் செய்வதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். கம்ப்யூட்டர் சிட்டாவை யார் பிரதி எடுத்தார்கள் அதில் யார் கையெழுத்து செய்தார்கள் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய மனு தள்ளுபடி செய்யப்பட்டு சீராய்வு மனு நிலுவையில் உள்ளதால் அந்த மனுவின் உத்தரவு வரும்வரை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்று கூறினார். 2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துகொள்ளப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.